
பக்கங்கள் 24+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 15 திங்கட்கிழமை 28.04.2025 | அதிர்வு 268



**ரணில் இன்று 3 மணிநேரம் வாக்குமூலம்** 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




## சிவராம் நினைவேந்தல் நாளில்

# தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணத்தில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி தர்மரத்தினம் சிவராம் உள்ளிட்ட தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதிகோரியாழ்ப்பாணத்தில்இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபி முன்பாக தர்மரத்தினம் சிவராம் மற்றும் செல்வராஜா ரஜீவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடகவியலாளர்கள், சிவில் அமைப்புகளின் உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்படமுன்னரே,நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதியில் பெருமளவான பொலிஸார் 03






# பெண்ணைப் படுகொலை செய்து சடலத்தை துண்டுகளாக வெட்டி ஆற்றில் வீசிய கொடூரம்

## இரண்டாவது கணவரும் மருமகனும் கைது



கொழும்பு – கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ் வீதி, நவகம்புர பிரதேசத்தில் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் இரண்டாவது கணவரும் மருமகனும் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஸ்டேஸ் வீதி, நவகம்புர பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவர் கடந்த 22 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயுள்ளார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்தது.

காணாமல்போன பெண்ணின் இரண்டாவது கணவரும் மருமகனும் இணைந்து அவரைக் கொலை செய்திருக்கலாம் எனக் காணாமல்போன பெண்ணின் மகள் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து, விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் காணாமல்போன பெண்ணின் வீட்டைச் சோதனையிட்டனர்.

சோதனையில், வீட்டினுள் இரத்தம் சிதைவடைந்து காணப்பட்டுள்ள நிலையில் அங்கு மறைத்து வைத்திருந்த கத்திகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பின்னர் குறித்த வீட்டுக்கு அருகில் உள்ள சி.சி.ரி.வி. கமராவைப் பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது, காணாமல்போன பெண்ணின் இரண்டாவது கணவரும் மருமகனும் குறித்த வீட்டிலிருந்து மூன்று உரைப் பைகளை வெளியே எடுத்துச் செல்லும் காட்சிகள் சில சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளதைப் பொலிஸார் அவதானித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் இருவரும் காணாமல் போன பெண்ணைக் கொலை செய்து அவரது சடலத்தைத் துண்டுகளாக வெட்டி உரைப் பைகளில் போட்டு நவகம்புர பிரதேசத்தில் உள்ள குப்பை ஆற்றில் வீசியுள்ளனர் என்று தெரியவந்தது.

இதனையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆற்றில் வீசப்பட்ட பெண்ணின் சடலத்தைத் தேடும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கைது செய்வதைத் தடுக்கக் கோரும் பிரசன்னவின் ரிட் மனு நிராகரிப்பு!

தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்நிலையில், தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீரவினால் நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த ரிட் மனு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ரணில் இன்று 3 மணிநேரம் வாக்குமூலம்



இலஞ்ச, ஊழல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழுவில் இன்று முன்னிலையான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுமார் 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

முற்பகல் 9.15 மணியளவில் மேற்படி ஆணைக்குழுவுக்கு தமது சட்டத்தரணிகள் சகிதம் வந்த ரணில், நண்பகல் 12.15 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார்.

2016 ஆம் ஆண்டு, ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க பதவி வகித்தபோது, பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவைக் காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

சாமர சம்பவத் தசநாயக்க கைது செய்யப்பட்ட பிறகு அது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

அது தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்கு வருமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இலஞ்ச, ஊழல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தது.

இரண்டு தடவைகள் கால அவகாசம் கேட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, இன்று ஆணைக்குழு முன் ஆஜராகி, வாக்குமூலம் வழங்கினார்.

அதன்பின்னர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, அங்கு நடந்தவற்றைத் தெளிவுபடுத்தினார்.

# மட்டக்குளி இளைஞர் படுகொலை: ஐந்து பேருக்கு மரண தண்டனை!

2012 ஆம் ஆண்டு கொழும்பின் மட்டக்குளி பகுதியில் உள்ள ஒரு கோயிலுக்கு அருகில் இளைஞர் ஒருவரைப் பொல்லுகளால் தாக்கிக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஐந்து பிரதிவாதிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இதே குற்றச்சாட்டில் குற்றவாளிகளாகக் கருதப்பட்ட மேலும் இரண்டு பிரதிவாதிகளுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குற்றம் நடந்த போது இரண்டு பிரதிவாதிகளும் 18 வயதுக்குட்பட்டவர்களாக இருந்ததால், அவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாக நீதிபதி அறிவித்தார்.



நீண்ட விசாரணைக்குப் பிறகு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க, பிரதிவாதிகள் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி அரசு தரப்பு நிரூபித்துள்ளதாகக் கூறினார் .

அதன்படி, பிரதிவாதிகள் மூன்று குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நீதிபதி குறிப்பிட்டார்.

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒரு குற்றவாளியும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களில் மற்றொரு குற்றவாளியும் தந்தை மற்றும் மகன் என்பது விசாரணையின்போது தெரியவந்தது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஏனைய இரண்டு பிரதிவாதிகள் விசாரணைக்கு இடையே இறந்துவிட்டனர்.

2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி மட்டக்குளி பகுதியில் கோயில் ஒன்றுக்கு அருகில் இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட தகராறு தீவிரமடைந்ததை அடுத்து, 21 வயது இளைஞரை விக்கெட் பொல்லுகள் மற்றும் தடிகளால் அடித்துக் கொன்றது உட்பட மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்தப் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் ஊடகவியலாளர்களின்...

சீருடைகளுடனும், சிவில் உடைகளுடனும் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பெருமளவான புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு, அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன், புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்தனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் தராக்கி தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்குஅருகில்வைத்துவெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளர் செல்வராஜா ரஜீவர்மன் 'உதயன்' பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.



# வவுனியா இரட்டைக்கொலை: 5 சந்தேகநபர்களுக்குப் பிணை



(கி.வசந்தன்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹாஸ் உத்தரவிட்டார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன், மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் 6 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த மார்ச் மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபர்கள் சார்பில் மேல் நீதிமன்றில் பிணை கோரி பிணை மனுவைச் சமர்ப்பித்திருந்தார்.

அதற்கு ஆட்சேபனை வெளியிட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தினர் பிணை வழங்குவதற்க்கு மறுப்புத் தெரிவித்து விளக்கமறியலை நீடிக்குமாறு வாதங்களை முன்வைத்திருந்தனர். இருப்பினும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் விசேட காரணங்கள் முன்வைக்கப்படாமையால் கைது செய்யப்பட்டவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கக் காரணம் போதாமையால் மேற்படி சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்கலாம் என நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைவாக இன்று குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய முதலாம், மூன்றாம், நான்காம், ஆறாம், ஒன்பதாம் இலக்க சந்தேகநபர்கள் 5 பேருக்கும் நிபந்தனைகளுடன் கூடிய பிணை வழங்கப்பட்டது.

ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா காசு பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணை – அதிலும் ஒரு பிணையாளி மனுதரராக இருக்க வேண்டும் என்பதுடன், இரு பிணையாளிகளும் கிராம அலுவலர் மூலம் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும், எல்லா சந்தேகநபர்களும் மாதாந்தம் கடைசி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிக்கு இடையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் தமது வரவைப் பதிவு செய்ய வேண்டும் எனவும், சந்தேகநபர்களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் வவுனியா நீதிவான் நீதிமன்ற பதிவாளருக்கு அறிவிக்கும்படியும் மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.



# யாழில் அதீத வெப்பத்தால் வயோதிபர் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணத்தில் நிலவும் அதீத வெப்பம் காரணமாக வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இணுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் யோகராசா (வயது 75) என்பவரே உயிரிழந்துள்ளார்

இணுவில் பகுதியில் வீதியோரமாக உள்ள தோட்டக்காணி ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வயோதிபர் ஒருவர் சடலமாகக் காணப்பட்டார்.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மரண விசாரணையில் அதீத வெப்பம் காரணமாக உடலில் நீரிழப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாமனிதர் தராகி சிவராமின் 20ஆவது நினைவேந்தல் நிகழ்வு



**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் 20ஆவது நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஊடக அமையம், கிழக்கிலங்கை ஊடகவியலாளர்கள் ஒன்றியம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் – பிரதான வீதியில் அமைந்துள்ள, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபியில் தராகி சிவராமின் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் தராகி சிவராம் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் செல்வராஜா ரஜிவர்மன் ஆகியோரின் உருவப் படத்துக்குச் சுடரேற்றி மலர் அஞ்சலி செலுத்தி நினைவுகூரப்பட்டது.

# மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு வடக்கு ஆளுநர் களப்பயணம்!

## வீதிகளின் திருத்தங்கள் தொடர்பில் கேட்டறிந்தார்








முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் களப்பயணம் மேற்கொண்டு பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் எந்திரி வ.ஜெகானந்தன், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.ஜசிந்தன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநந்தன், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பா.சிவதர்சினி ஆகியோருடன் மாந்தை கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஆளுநர் கலந்துரையாடல் நடத்தினார். மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளின் திருத்தங்கள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அதன் பின்னர் குத்துப்பால வீதியை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்களும் இணைந்து கொண்டனர்.

அந்த வீதியில் அமைந்துள்ள குத்துப்பாலம் கடுமையாக சேதமடைந்துள்ள நிலையில் மழை காலத்தில் பயணிக்கவே முடியாத நிலைமை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

பாலத்தின் சேதங்களைத் தற்காலிகமாக உடனடியாகப் புனரமைப்பதற்கும், பாலத்தை நிரந்தரமாக நிர்மாணிப்பதற்கான வடிவமைப்பை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தையும் மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணித்தார்.

அதனைத் தொடர்ந்து பாலிநகர் – பாண்டியன்குளம் பிரதான வீதியை ஆளுநர் பார்வையிட்டார். அந்த வீதி நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமாகவுள்ள நிலையில், அதன் புனரமைப்புப் பணிகளுக்காக பிரதேச சபையிடம் கையளிப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

அதைச் சாதகமாக ஆளுநர் கவனத்தில் எடுத்து தொடர் நடவடிக்கையை முன்னெடுக்கப் பணிப்புரைவிடுத்தார்.

கரும்புள்ளியான் – மல்லாவி இணைப்பு வீதியையும் ஆளுநர் பார்வையிட்டார். இதன்போது வீதியால் மக்கள் பயணிப்பதற்கு பெரும் அவலங்களை எதிர்கொள்வதையும் நேரில் கண்டார். மூன்றரை கிலோ மீற்றர் நீளமான அந்த வீதியும் நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமாகவுள்ள நிலையில் அதனையும் பிரதேச சபையிடம் கையளித்து புனரமைப்பை முன்னெடுக்க முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஆளுநர் இணக்கம் வெளியிட்டார்.

இதன் பின்னர் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சிராட்டிக்குளம் பிரதான வீதியையும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். அந்த வீதியில் 8 கிலோ மீற்றர் பிரதேச சபைக்குச் சொந்தமானதாகவுள்ள நிலையில் அதனை வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கையளித்து அவர்கள் ஊடாக புனரமைப்பை முன்னெடுக்க ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், சிராட்டிக்குளம் அ.த.க. பாடசாலை, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் என்பனவற்றையும் ஆளுநர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், அந்தப் பாடசாலைகளின் தேவைகளையும் அவர் கேட்டறிந்தார்.





# புதிய அலை கலை வட்ட மகளிர் அணி நடத்திய சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு

புதிய அலை கலை வட்ட மகளிர் அணி நடத்திய சித்திரைப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோறல் குரூப் நிறுவனங்களின் அதிபர் கலாநிதி சு.பிரபாகரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

உள்ளக விளையாட்டுப் போட்டிகள், பண்டிகைகள் சிறப்புற பெரிதும் பங்களிப்புச் செய்வோர் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம், முற்றிலும் இளையவர்களைக் கொண்ட பாட்டரங்கம் மற்றும் ஆடல் அரங்கம் என்பன இதன்போது இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளால் பரிசில்களும் இதன்போது வழங்கப்பட்டன.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இரட்டை வேடம்!

எழுபத்தைந்து ஆண்டுகளாக ஊழலுக்கும் குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை தற்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருக்கின்றார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ, ஹுங்கம மற்றும் தங்காலை பகுதிகளில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் கூறியவை உண்மையா, அரச சேவையில் ஊழலும், மோசடிகளும், முறைகேடுகளும் முடிவுக்கு வருமா அல்லது முன்னைய அரசுகள் கொடுத்த வாக்குறுதி போல இந்த அரசின் வாக்குறுதியும் காற்றில் பறந்து, இவர்களும் அவற்றைத்தான் வேறு வடிவில் செய்வார்களா என்பவற்றை எல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆயினும், ஊழல், முறைகேடுகள், மோசடிகளுக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்று காட்டி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியினர், இப்போது உள்ளூராட்சி தேர்தலில் பல இடங்களில் நிறுத்தி இருக்கும் வேட்பாளர்கள் கடந்த காலங்களில் இத்தகைய ஊழல், மோசடிகளில் பெயர் போனவர்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு. எது, எப்படியாயினும் காலம் விரைவில் இவர்களின் போக்குக் குறித்து முடிவு சொல்லும்.

ஆயினும், ஊழலுக்கும், அது போன்ற குற்றங்களுக்கும் இருந்து வந்த அரசியல் பாதுகாப்பை நீக்குகின்றோம் என்று கூறும் இந்த அரசியல் தலைவர்கள், தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைத்தரப்புகள் இழைத்தவை என்று கூறப்படும் மிக மோசமான குற்றங்களுக்குப் பாதுகாப்பு அளித்து, காவலரண் வழங்கி வரும் தன்னுடைய ஆட்சி பீடத்தினதும் கீழ்மைத்தனத்தை எப்போது திருத்தப் போகின்றது? அந்தப் பாதுகாப்பை எப்போது விலக்கி, நீதி - நியாயமான, உண்மையான, சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகள் நடைபெறவும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி பொறுப்புக் கூறலை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் எப்போது இந்த பிரதமரின் அரசு நடவடிக்கை எடுக்கப் போகின்றது? அதையும் சேர்த்து அறிவித்தால் கொஞ்சம் நன்றாக இருக்கும்.

ஊழல், மோசடிகள், லஞ்சம், முறைகேடுகள் போன்றவற்றுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்க மாட்டோம், ஆனால், படையினர் புரிந்த யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பான விடயங்களில் படையினருக்கு முறையற்ற பாதுகாப்பை வழங்கும் கீழ் தரப் போக்கை தொடர்வோம் என்பதில் மட்டும் இந்த அரசும் தீவிரமாக இருக்கிறது.

அந்தப் போக்கின் மூலம் இலங்கையில் தொடர்ந்து ஆட்சி செய்து வரும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க சிந்தனை கொண்ட அடக்குமுறைத் தரப்பே தன்னுடைய அரசும் என்பதை தேசிய மக்கள் சக்தியும் மறக்காமல் உறுதிப்படுத்தி நிற்கின்றது.

ஒரு புறம் ஊழல், மோசடிகளுக்கு நடவடிக்கை. மறுபுறம் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு அரச பாதுகாப்பு என்ற இரட்டை வேடம் போடுகிறது அரசு. 'ஒரு கண்ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணாம்பு' என்ற இந்த கீழ்த்தரமான ஆட்சித் தத்துவம் குறித்து சிறுபான்மையினர் - குறிப்பாகத் தமிழர்கள் - மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



## அமெரிக்காவின் புதிய வரி விதிப்பால் முதலில் பாதிக்கப்படுவது நாம்தாம்!

### ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

(மஸ்கெலியா )

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை இலங்கைக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பது இப்போது யாருக்கும் புரியாது. ஆனால் அதில் அதிகம் பாதிக்கப்படுவது நாம் தாம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

லிந்துலை அக்கரப்பத்தனை பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அமெரிக்கா ஜனாதிபதியுனுடைய உத்தியோகஸ்தர்ளுடன் கலந்துரையாடி வரியைக் குறைக்காவிட்டால் முதலில் பாதிக்கப்பட போவது தேயிலை தோட்டங்கள்தான். இதற்கு காரணம் புதிய வரி விதித்திருப்பது ஏற்றுமதி பொருள்கள் மீதே ஆகும். இதில் முதலாம் இடத்தில் இருப்பது தொழிற்சாலைகள், இரண்டாவது இடத்தில் தேயிலை. இது இவ்வாறு இருக்க சம்பளம் மிக பெரிய பிரச்சினையாக அமையும். காரணம் தற்போது தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிப்பு பற்றி பேசுகின்றோம். ஆனால் வரி விதிக்கப்பட்டால் சம்பளம் குறைக்கப்படும். அத்துடன் தேயிலை பறிக்கும் எடையின் அளவு அதிகரிக்கப்படும்.

கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் நாம் ஓரளவு வளர்ச்சி அடைந்து வந்தோம் காரணம் முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரம்தான் பொருளாதாரத்தை பற்றி நன்கு அறிந்த ஒருவராவார். ஆனால் தற்போது நாம் அனைவரும் பெரியதொரு ஆபத்தை பொருளாதாரத்தில் எதிர்கொள்ளப் போகின்றோம். அதற்கு நாம் அனைவரும் எதிர்காலத்தில் தயாராகவே இருக்க வேண்டும். எனவே இனிவரும் காலங்களில் சிந்தித்துச் செயல்படுவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு வீட்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்காக குறைந்த வீடுகளுக்கான திட்டமே உள்ளன. 2004 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்துக்கு ஜீவன் தொண்டமான் தலைமையில் நிதி ஒதுக்கீடு செய்தது 550 மில்லியன் ஆனால் தற்போதைய அரசு நுவரெலியா மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது 92 மில்லியன். ஏன் இவ்வாறு அக்கறையில்லாமல் செயல்படுகின்றார்கள். எல்லாம் வாய்சொல் வீரர்களாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் தீரப்போவதில்லை .- என்றார்.

இப்பிரசார கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.கா. தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் மற்றும் அக்கரப்பத்தனை பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 150 ஆசனங்களைக் கைப்பற்றும்!



### மன்னார் அரசியல் செயற்பாட்டாளர் முஹம்மட் ரிஷான்

(நூருல் ஹுதா உமர்)

வடபுல மக்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் மீது கொண்ட நம்பிக்கையும், தலைவர் றிசாத் எம் மக்கள் மீது கொண்டுள்ள பற்றையும் சகித்துக் கொள்ள முடியாத நாசகார கூட்டம் ஓடோடி திரிகிறது. இவர்களது இந்தச் செயற்பாடுகளுக்கு எமது மக்கள் தகுந்த பதிலடி எதிர்வரும் தேர்தலில் வழங்குவார்கள்.

மன்னாரைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர், தொழிலதிபருமான முஹம்மட் ரிஷான் ஷேக் அமானி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் தொலைபேசி சின்னத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு கூறினார். இந்த சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் செயற்பாடுகளால் இன்று எமது மக்கள் நன்மை அடைந்துள்ளனர். கடந்த காலங்களில் அவர் வகித்த அமைச்சு பதவிகள் மூலம் வடபுலத்தில் மட்டுமல்ல நாடு தழுவிய முறையில் பாரிய சமூக நல பணிகளை மக்களுக்காக ஆற்றியுள்ளார். குறிப்பாக மாவட்ட அரசியல்வாதிகள் அவர்களது வாக்குகளை மட்டும் தக்க வைத்துக் கொள்ள தமது மாவட்டத்தை மட்டும் பார்க்கின்ற நிலையே காணப்பட்டது.

ஆனால் தலைவர் றிசாத் பதியுதீன் அதனைக் கடந்து மனித நேயமும், மக்களின் தேவைகளையும் தேடிப் பார்த்து அவற்றை செய்கின்ற ஒருவராக இருப்பதால் மக்கள் அவரை வரவேற்கின்றனர்.

ஆனால் இவ்வாறு மக்கள் அவருக்கு ஆதரவு கொடுக்க முற்படுகின்ற போது அதை சீர்குலைத்து தங்களது சில தேவைகளை பெறுவதற்காக பிறரின் கைக்கூலிகளாக செயற்படுகின்ற சில நாசகார கூட்டம் தேர்தல் காலங்களில் காளான்களை போல முளைத்து தமது திருகுதாளங்கள் செய்வதை தற்போது காணமுடிகின்றது. இந்த தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாநகர, நகர , பிரதேச சபைகளில் 150 ஆசனங்களை கைப்பற்றும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதை இன்று எமது தலைமை போகின்ற இடங்களிலும், அது போன்று அவருடன் அணி திரளும் மக்கள் அலையை வைத்து கூறமுடியும்.

எனவே இந்த நாசகார கும்பல்களுக்கு இந்த தேர்தலில் எமது மக்கள் தகுந்த பாடம் புகட்டி அவர்களை அரசியல் அரங்கில் இருந்து அகற்றுவார்கள் என்பது திண்ணம்.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

## முஸ்லிம்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதற்கு சமம்

### இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்., எச் எம் ஹலால்தீன்)

முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமாகும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

இந்த அரசு இஸ்ரேலைத் திருப்திப் படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞர் ருஸ்தியை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

இஸ்ரேலியர்கள் இலங்கையில் அவர்களது சமய ஸ்தலங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசு அதற்கு அரச பாதுகாப்பை வழங்கி வருகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது சரியான பதில் கொடுக்க முடியாது அரசு மழுப்பிய விடயம் நம் அனைவருக்கும் தெரியும்.

பொத்துவில் அருகம்பேயில் யூதர்கள் பாலர் பாடசாலை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளதோடு அதற்காக 5 இற்கும் மேற்பட்டோருக்கு நீண்ட நாள் விசா வழங்கி வருகின்றது. இதனால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி உள்ளார்கள். இவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டித்தான் பொத்துவில் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

அருகம்பே பகுதியில் பாலர் பாடசாலை நடத்துகிறோம் என்ற போர்வையில் யூதர்கள் நிரந்தரமாக ஏன் தங்கி உள்ளார்கள் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இங்கிருந்து முஸ்லிம்களுக்கு எதிரான சதித் திட்டம் ஏதும் தீட்டப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இலங்கையில் உள்ள சட்டத்தின்படி தனியார் எவரும் இலங்கை பாடத் திட்டத்தைப் போதிக்கும் தனியார் பாடசாலை நடத்த முடியாது. ஆனால் அருகம்பேயில் பாலர் பாடசாலை நடத்த யூதர்களுக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலியர்கள் என்றால் சட்டதிட்டம் பார்க்கப்படாது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இந்த அரசு இஸ்ரேலர்களைப் போசித்து பராமரிக்கும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது என்பதை நாம் இவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே இந்த அரசுக்கு வாக்களிப்பதானது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். – என்றார்.





## பொத்துவிலில் வீட்டுக்கு வீடு பிரசாரம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பொத்துவில் பிரதேச சபைக்கான தேர்தல் பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பொத்துவில் பிரதேச சின்ன உல்லை வட்டாரத்தில் வீட்டுக்கு வீடு பிரசாரம் சின்ன உல்லை வட்டார வேட்பாளர் தோழர் சஹான் ஹனிபா தலைமையிலும் மற்றும் சர வோதயபுர வட்டார பிரசாரம் சர்வோதயபுர வட்டார வேட்பாளர் தோழர் இமாம் தலைமையிலும் மற்றும் நகர வட்டார பிரசாரம் நகர வட்டார வேட்பாளர் இல்யாஸ் கபூர் தலைமையிலும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வுகளில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம் பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக இணைந்து செயற்பட்டார்.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச அமைப்பாளர் ஆதம் சலீம், தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பொத்துவில் பிரதேச செயற்பாட்டாளர்களான தானிஸ் மற்றும் பஹாத், பொத்துவில் பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## முஸ்லிம் காங்கிரஸை ஆதரிக்காவிட்டால் இன்னும் 5 வருடங்களுக்கு நஷ்டம்தான்!

### வீரமுனை வட்டார வேட்பாளர் கே.ஆர்.எம். றிசாட் தெரிவிப்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் மாபெரும் பிரச்சாரக் கூட்டம் சம்மாந்துறையில் நடைபெற்றது.

இதன் போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வீரமுனை வட்டார வேட்பாளர் கே.ஆர்.எம். றிசாட் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வீரமுனை வட்டாரத்தில் நான் களம் இறங்க வேண்டும் என்று மக்களின் கோரிக்கைக்காகவே இந்தத் தேர்தலில் களம் இறங்கினேன். உங்களுடைய நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பற்றி மிகவும் நேர்த்தியாகக் கூறியிருந்தார். ஆனால் நாம் தேசிய மக்கள் சக்தி எனும் மாய வலையினுள் இருந்ததால் அது எமக்கு தெரியாமல் போயிருந்தது.

ஆனால் இன்று தேசிய மக்கள் சக்தி அரசைக் கொண்டு வந்தவர்களுக்கு எங்களுடைய அரசு என்று சொல்லுவதற்கு வெட்கமான நிலைமை ஏற்படும் இருக்கிறது.

சம்மாந்துறை இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறும் ஊர். ஆனால் இந்த வாய்ப்பைக் கடந்த தேர்தலில் நாம் இழந்து நிற்கின்றோம். மீண்டும் அந்த சந்தர்ப்பம் வருமா என்னும் கவலை இருக்கும்போது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போது நடைபெறவுள்ளது. ஏன் என்றால் எங்களுடைய ஊருக்கு அதிகாரம் தேவை என்பதால் தான் நான் கூட இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.– என்றார்.

## ஓட்டமாவடி சபையின் ஆட்சியை தந்தால் பெரிய பரிசு காத்திருக்கிறது

### இப்படித் தெரிவிக்கிறார் ரவூப் ஹகீம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓட்டமாவடி பிரதேச சபையில் எமக்குக் கூடுதலான ஆசனங்கள் கிடைத்தும் ஆட்சி அமைக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. எங்களது கட்சியில் போட்டியிட்டவர் மாறிப்போனதால் ஆட்சி கை நழுவிப் போனது.

இந்த முறை ஓட்டமாவடி சபையின் ஆட்சியைப் பெற்றுத் தந்தால் பெரிய பரிசு காத்திருக்கிறது

இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபைக்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை அறிமுகம்



செய்யும் நிகழ்வு ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

இந்த முறை நடைபெறவுள்ள தேர்தலில் நீங்கள் ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியைப் பெற்றுத் தந்தால் அதற்கான பெரிய பரிசு காத்திருக்கிறது.

அதை நீங்கள் பெற்றுத் தரவேண்டும். அதன் மூலம் இந்தப் பிரதேசத்தை நான் கண்ணியப்படுத்தி, கௌரவப்படுத்த வேண்டும் எனும் ஆவலோடு காத்திருக்கிறேன்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நீங்கள் எல்லோரும் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸுக்கு அளித்த வாக்குகளால் தான் எங்களுக்கு மேலதிகமாக ஒரு ஆசனம் கிட்டியது.

அந்த ஆசனத்தை சுழற்சி முறையில் பங்கிடுவது என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசத்தில் முஸ்லிம் காங்கிரஸின் அபிமானம்,மீளக்கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது எனும் விவகாரத்தை நீங்கள் உரத்துச் சொல்ல வேண்டும்.– என்றார்.



# வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகிய லொறி!

**(உடப்பு க.மகாதேவன்)**

குருணாகல் இப்பாகமுவ மடகல்ல பகுதி கிரிபமுன 4 கிலோ மீற்றர் இடத்தில் லொறி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து தொலைபேசி கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த சம்பவம் இன்று திங்கள் கிழமை(28) காலை 6.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்த லொறியின் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். மேலதிக விசாரணைகளை இப்பாகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# களுவாஞ்சிகுடி தனியார் தாதியர் கல்லூரியில் தொப்பி அணிவித்தல்

**(பழுவூரான்)**

களுவாஞ்சிகுடி தனியார் தாதியர் பயிற்சிக் கல்லூரி நடத்திய தொப்பி அணிவித்தல் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (26) மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டீனா முரளீதரனும், கௌரவ அதிதியாக மிஸன் ஏசியா நிறுவனத்தின் தலைவரும், சர்வதேச ஒருங்கிணைப்பாளருமான வண.ரவிக்குமார் ராஜதுரையும், சிறப்பு அதிதிகளாக அம்பாறை பொது வைத்தியசாலை வைத்திய நிபுணர் வி.கொபூர், மக்கள் வங்கி பொது கணக்காய்வுத் திணைக்கள முகாமையாளர் ஈ.ஜீ.போல் பிரகாஸ், வணபிதா ஏ.ஜெகன்ரன், எந்திரி அன்ரன் தம்பிமுத்து, மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் என்.தினேஷ்குமார், தேசிய



இளைஞர் சேவைகள் மன்ற உதவி பணிப்பாளர் திருமதி நிசாந்தி அருள்மொழி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தாதியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த 100 தாதியர்களுக்குத் தொப்பி அணிவித்து, சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தாதிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் சாய்ந்தமருதில் அழிப்பு

## உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு

(நூருல் ஹுதா உமர்)

பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 'கியூஆர் கோட்' மூலமான முறைப்பாட்டிடைத் தொடர்ந்து அதன் உண்மைத் தன்மையை அறிய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவகத்தில் திடீர் சோதனை செய்யப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உடனடியாக செயற்பட்டு உணவு கையாளும் நிறுவனத்தைப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

இதன் போது குறித்த நிறுவனத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் சேமிக்கப்பட்டிருந்த மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருளகள் கைப்பற்றப்பட்டு அதிக்கப்பட்டது. உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.



மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்பும் ஆகும். ஆகவே உங்களது முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் எங்களுக்கு அறியத்தாருங்கள் 'கியூஆர் கோட்' ஊடாக தகவல்கள் வழங்கப்படும் பட்சத்தில் விரைவாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் பொது மக்களை கேட்டுக் கொண் டுள்ளார்.

# 13 வருடங்களின் பின்னர் நடைபெற்றுள்ள மாவடிப்பள்ளி அஷ்ரப் விளையாட்டு விழா!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய மாவடிப் பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியா லயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி 13 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்றுள்து.

யூ.கே முஹம்மது நஜீப் மற்றும் எம்.எஸ்.எம். அசீம் ஆசிரியர்களின் நெறியாள்கையில் பாடசாலை அதிபர் ஏ.எல். ரஜப்டீன் தலைமையில் பாடசா லையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக நிர்வாகத் துக்குப் கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், பிரதி கல்வித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வி. சாந்தரூபன், கோட்டக் கல்விப் பணிப்பாளரும், பிரதிக் கல்விப் பணிப் பாளருமான ஏ. சன்ஜீவன், உடற்கல் விக்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எல். எம். முதர்ரீஸ், ஆசிரிய ஆலோசகர் ஏ.எம். அன்சார், பாடசாலையின் முன்னாள் அதிபர்க ளான எம்.எஸ்.எம்.சைபுதீன், அதிபர் வி.எம். ஸம்ஸம், எச்.எம்.எம். அனீஸ் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை முன்றிலில் இல்ல விளை யாட்டுப் போட்டியின் நினைவாக பிரதம அதிதியால் மரம் ஒன்று நடப்பட்டது.






# போக்குவரத்துக்கு உதவாத வகையில் திருத்தி அமைக்கப்படும் டயகம வீதி!

## கடும் மழையிலும் மக்கள் ஆர்ப்பாட்டம்

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ், மஸ்கெலியா)**

லிந்துலை முதல் டயகம வரையிலான பிரதான வீதி பல வருடங்களாக புனரமைப்பு செய்யாமல் காணப்படுகிறது. இருப்பின் டயகம நகர பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பாதை அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அப்பணி முறையாக இடம்பெறாத காரணத்தால் வீதி முறையற்ற வகையில் செப்பனியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் கடும் மழையிலும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பி தங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி வேலைத் திட்டங்களை முன்னெடுத்த போதிலும் இந்த வேலை திட்டங்கள் மக்களுக்குச் சரியான முறையில் சென்றடைய வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களின் கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் டயகம பிரதான நகரத்தில் இரண்டு மணிநேரம் இடம் பெற்றது.

புனரமைப்புச் செய்யப்பட்ட வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

# திக்கம் வடிசாலை விவகாரத்தில் ஈ.பி.டி.பி. உருத்திராட்சப் பூனையைப் போல் நாடகம்!

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் குற்றச்சாட்டு

**(த.சுபேசன்)**

திக்கம் வடிசாலை விவகாரத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் உருத்திராட்சப் பூனை போல் (எலி பிடிக்காத பூனையாக) நாடகம் போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

திக்கம் வடிசாலை விவகாரம் தொடர்பாக ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஊடகங்களுக்கு வழங்கிய கருத்துக்களுக்கு மறுப்புத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

திக்கம் வடிசாலை விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் அநீதியுடன் தொடர்புடையவர்கள். அவர்கள் தற்போது நன்மைகள் நடக்கும் போது அமைதியாக இருக்க வேண்டும். அல்லது தாம் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் தேட ஏதாவது நன்மைகளைச் செய்ய முன்வர வேண்டும்.

ஆனால் இவர்கள் அவற்றைத் தவிர்த்து, திக்கம் வடிசாலை விவகாரத்தில் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது அறுதி என்ற நிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஈ.பி.டி.பி. கட்சியினர், மக்களின் சொத்து மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக இருந்திருந்தால் 2000 ஆம் ஆண்டில் இருந்து நீறு பூத்த நெருப்பாக இருக்கும்



இந்த விடயத்தை பாரா முகமாக இருந்திருப்பார்களா?

கடந்த காலத்தில் திக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அத்தனை முறைகேடுகளும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும்.

தற்போது நாம் நன்மைகள் செய்ய விளையும் போது தாம் உருத்திராட்சப் பூனைகள் போன்று நாடகம் போடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அண்மையில் என்னால் கைதடியில் இருந்து திக்கம் வரை மேற்கொள்ளப்பட்ட நடை பயணம் அரசியல் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதில்லை. பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை எடுத்த பனை தென்னை வள சங்கங்களுக்குச் சாதகமான தீர்மானங்களை நான் நடை பயணமாக கொண்டு சென்று வழங்க வேண்டிய அவசியமும் இல்லை.

இருப்பினும் பனம்தொழிற்துறையின் பெருமையையும் திக்கம் வடிசாலை விவகாரத்தையும் மக்கள் அறிய வேண்டும் என்ற விழிப்புணர்வுக்காகவே 32 கிலோ மீற்றர் நடை பயணம் செய்து தீர்மானத்தை தெரியப்படுத்தினேன்.

அத்தோடு எமது பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கடந்த காலத்தைப் போன்று எடுபிடிகள் அல்ல.

அவர்களுடைய ஆலோசனைகள் பெறுமதிமிக்கவை. அவர்கள் தீர ஆராய்ந்தே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்குவது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

திக்கம் வடிசாலை தொடர்பாக தற்போது கருத்துச் சொல்பவர்கள் 25

தொடர்ச்சி▼

# திக்கம்...

தொடர்ச்சி▲

வருடங்களாக மக்களுக்குச் செய்த உபத்திரவம் போதும். மக்கள் அவர்களை ஒதுங்கி இருக்கச் சொல்லி விட்டனர்.

திக்கம் வடிசாலை விடயத்தை மீண்டும் அரசியலாக்க வேண்டாம். கடந்த காலங்களில் எனக்கு வந்த அச்சுறுத்தல்களுக்கு ஏராளமான ஆதா ரங்கள் உள்ளன.

எதிர்காலத்திலும் அச்சுறுத்தல்கள் வரலாம். அதனைக் கண்டு அஞ்சப் போவதில்லை.

திக்கம் வடிசாலை நாட்டினுடைய வளம். நடக்கும் நன்மைகளுக்கு எவரும் தடையாக இருக்கக் கூடாது.

புதிய அரசின் ஊழல் அற்ற கொள்கையின் வெளிப்பாடாகவே திக்கம் வடிசாலையை மீளவும் சங்கங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஈ.பி.டி.பியினர் உணர்ந்து, ஒதுங்கி இருக்க வேண்டும். மக்கள் ஏற்கனவே உங்களை ஒதுக்கி வைத்து விட்டனர். இந்தத் தேர்தலில் அடியோடு ஒதுக்குவார்கள்.- என்றார்.







# அருட்தந்தை இராயப்பு யோசப் நினைவாக பிரான்சில் அஞ்சல் முத்திரை வெளியீடு!

மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் அருட்தந்தை “நீதியின் குரல்” இராயப்பு யோசப்பின் மரியாதை வணக்க நிகழ்வும், நினைவு முத்திரை வெளியீடும் பிரான்சில் நேற்று (27) நடைபெற்றன.

அகவணக்கத்துடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் ஈகைச் சுடர் ஏற்றலைத் தொடர்ந்து “நீதியின் குரல்” இராயப்பு யோசப்பின் திருவுருவப் படத்துக்கு பொண்டி நகரின் மேயர் மலர் மாலை அணிவித்தார்.

ஆயர் அருட்தந்தை “நீதியின் குரல்” இராயப்பு யோசப்பின் நினைவு முத்திரியை பொண்டி நகரின் மேயர் வெளியிட, பிரான்ஸ் தமிழர் வர்த்தக சங்க நிர்வாகத்தினர் பெற்றுக்கொண்டனர்.

குறித்த நிகழ்வில் பலரின் நினைவு உரைகளும் இடம்பெற்றன. “நீதியின் குரல்” இராயப்பு யோசப்பின் ஆவண காணொளியும் திரையிடப்பட்டது.













## தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால்

# 19 லட்சத்து 38 ஆயிரம் ரூபா நிதியில் பிரமணாலங்குளத்தில் அறநெறிப் பள்ளி!









வவுனியா – பிரமணாலங்குளம், வடகாடு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடம் நேற்று (27) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்க்கப்பட்டனர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் 19 லட்சத்து 38 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கட்டடத்தை, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்ததுடன், பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து வெங்கல செட்டிக்குளம்



பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர்களான தி.சிவகஜன், கி.சங்சுருவேணு, வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் சுஜேந்திரன், கிராம சேவையாளர் திருமதி சோபனா மற்றும் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பஞ்சபுராணம் ஓதப்பட்டதுடன், வரவேற்பு நடனம், வரவேற்பு உரை, என்பன இடம் பெற்றன. வடகாடு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை, பெரியதம்பனை ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய அறநெறி மாணவர்களுக்கான சீருடைத் துணிகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள், மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் வருடாந்த பயிற்சி பாசறை!

(றிபாஸ்)

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் வருடாந்த சாரணர் பயிற்சி பாசறை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளரும் மாவட்ட சாரண ஆணையாளரகவும் இருந்த யூ.எல். எம்.ஹாசிமின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பையின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (25) தொடக்கம் நேற்று (27) வரை இது இடம்பெற்றது.

தொடர்ச்சி▼







# அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் வருடாந்த பயிற்சி பாசறை!

தொடர்ச்சி▲

இந்தப் பயிற்சி பாசறைக்கு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் இருந்து 800 இற்கு மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.

முதல் நாள் நிகழ்வில் அக்கரைப்பற்று, திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாதுகாப்பு படையின் உயர் அதிகாரிகள், சங்கத்தின் தவிசாளர், தலைவர், செயலாளர் உட்பட உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், கல்வியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மூன்று நாள்களாக நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பாசறையில் தமிழ், முஸ்லிம், சாரணர்கள் ஒன்றாக தங்கியிருந்தனர்.

இவர்களுக்கிடையில் இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பரஸ்பரம், ஒற்றுமை, சகோதரத்துவவும் ஏற்படுவதற்கும் இவ்வாறான பாசறைகள் வழிவகுக்கும் என ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப். றிபாஸ் தெரிவித்துள்ளார்.






# ஏழு பேர் ஆழ்கடல் சுழியோடிகளாகத் தெரிவு!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

சம்மாந்துறை அல் உஸ்வா மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் படைக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களுக்கு நேற்று ஞாயிற்றுக் கிழமை (27) கடற்படையின் ஆழ்கடல் சுழியோடிகளால் ஒலுவில் துறைமுகத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்ட பயிலுனர்களிலுள் ஏழு பேர் ஆழ்கடல் சுழியோடிகளாக தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் சாய்ந்தமருது, சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.இந்த ஆழ்கடல் சுழியோடிகளுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் அல்தாப், கடற்படையினரின் ஆழ்கடல் சுழியோடி போன்றவர்களின் நேரடி கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










## ஆஸ்திரேலியத் தேர்தல் - 2025 :

# கருத்துக் கணிப்பில் யார் முன்னிலை? குடிவரவுக் கொள்கையில் மாற்றம் வருமா ?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

ஆஸ்திரேலியாவில் மே 3 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என பிரதமர் அந்தோணி அல்பானீஸ் அறிவித்தன் பின்னர் கடந்த ஐந்து வாரங் களாக தீவிர பிரசாரம் நடைபெற்று வருகிறது.

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி (டுயடிழரசீயசவல) பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. தற்போதைய நிலவரப்படி அந்தக் கட்சியின் செல்வாக்கு சிலகாலம் சரிந்திருந்தாலும், மீண்டும் முன்னிலையில் உள்ளது.

கொவிட் தொற்றுக் காலத்தின் பின்னர் ஆஸ்திரேலி யாவில் வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், அதிக பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் வாடகை போன்ற காரணங்களில் மக்கள் விரக்தியடைந்துள்ள சூழலில் இந்தப் பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

இரண்டாவது தடவையாக மூன்று ஆண்டு பதவிக் காலத்தை எதிர்பார்க்கும் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் (யுவொழலெ யுடடியநௌந) தொழிலாளர் கட்சி, தற்போது பிரதிநிதிகள் சபையில் உள்ள 151 இடங்களில் 77 இடங்களைக் கொண்டுள்ளது.

அதேவேளை பெரும்பான்மையான வாக்காளர்கள் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் மீது சந்தேகம் கொண்டிருப்பதாக கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.

### எதிர்க்கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சி

எதிர்க் கட்சியான லிபரல் கட்சியின் (Liberal Party) தலைவர் பீட்டர் டட்டனின் சில திட்டங்கள், அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் இடம்பெற்றிருக்கும் எலான் மாஸ்க்கின் அரச திறன் துறையின் செயல்பாடுகளோடு ஒத்துப் போவது போன்று இருப்பதாக மக்களிடையே எதிர்ப்புக் கிளம்பியது. இதனால் இந்தத் தேர்தலில் அவருக்கான ஆதரவு குறைந்துள்ளது என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

அதாவது, அரசு ஊழியர்கள் முழு நேர வேலைக்கு அலுவலகத்துக்குத் திரும்ப வேண்டும். பொதுத்துறை ஊழியர்கள் 10 ஆயிரம் பேர் வேலை இழக்கும் திட்டம் ஆகியவை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட் டதால், அதனை டட்டன் கைவிடும் நிலைக்கு தள்ளப் பட்டார்.

கடந்த ஜனவரியில் டட்டனின் லிபரல் கட்சி கூட்டணி ஆறு வீதம் முன்னிலையில் இருந்தது. தற்போது ஏப்ரல் மாத தொடக்கத்தில் பிரதமரின் ஆளும் கட்சி ஒன்பது வீதம் அதிகரித்து கருத்துக்கணிப்பில் முன்னிலை பெற்றுள்ளது.

அஞ்சல் வாக்குகள் அதிகரித்துவரும் நிலையில், வாக்களிக்க தகுதியுள்ள ஆஸ்திரேலியர்களில் பாதி பேர் மே 3 ஆம் திகதிக்கு முன்பாகவே வாக்களித்து விடுவார்கள் என்று தேர்தல் ஆணையத்தின் தரவுகள் கூறுகின்றன.

### ஆஸ்திரேலியா நாடாளுமன்ற ஜனநாயகம்

ஆஸ்திரேலியா நாடாளுமன்றம் (ீயசடயைஅநவெ ழக யுரளவசயடயை) அல்லது பொதுநலவாய நாடாளுமன்றம் (ஊழஅஅழறெநயடவாியசடயைஅநவெ) என்பது அரசாங்க சட்டமன்றத்தின் ஒரு கிளையாகும்.

இரு அவைகளைக் கொண்ட இந்தச் சட்ட மன்றம் பெரும்பாலும் ஐக்கிய இராச்சியத்தின் வெஸ்ட்மின்ஸ்டர் முறையை ஒத்தது. ஆனாலும் ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசின் சில சிறப்பு அம்சங்களையும் உள்ளடக் கியுள்ளது.

ஆஸ்திரேலியா அரசியமைப்பின் படி, ஆஸ்திரேலியா நாடாளுமன்றம் மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அரசர், மேலவை, மற்றும் பிரதிநிதிகள் அவை.

அரசர் பொதுவாக தனது பிரதிநிதியாக பொது ஆளுநரை (Governor General) நியமித்துள்ளார். கீழவை (அல்லது பிரதிநிதிகள் அவை) தற்போது 150 உறுப்பி னர்களைக் கொண்டுள்ளது. இவர்கள் ஆஸ்திரேலியாவின் நாடாளுமன்றத் தொகுதிகளுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

தொகுதிகளின் மக்கள் தொகை, எல்லைகள் மாறும் போது உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மாற்ற மடையும். 1984 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 125 இலிருந்து 148 ஆக உயர்த்தப்பட்டது.

இது 1993 இல் 147 ஆகக் குறைக்கப்பட்டு, பின்னர் மீண்டும் 1996 இல் 148 ஆக அதிகரிக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டில் 150 ஆக அதிகரித்தது.

மேலவை (அல்லது செனட் அவை), 76 உறுப்பினர் களைக் கொண்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் 12 உறுப்பினர்களும், இரண்டு மண்டலங்களில் ஒவ் வொன்றிலும் இருவருமாக மொத்தம் 76 உறுப்பினர்கள் உள்ளனர்.

செனட்டர்கள் விகிதாசார முறைப்படி தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். இரு அவைகளும் கான்பராவில் உள்ளன.

### தேர்தல் கருத்துக் கணிப்பு

தற்போதைய தேர்தலில் இரு பிரதான கட்சிகளான தொழிற் கட்சி, லிபரல் கட்சிக்கு இடையே கடும்போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய பிரதமர், எங்கள் அரசு உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளத் தயாராகி விட்டது. வாழ்க்கைச் செலவினைப் பிரச்சினையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு

தொடர்ச்சி▼



# கருத்துக் கணிப்பில் யார் முன்னிலை? குடிவரவுக் கொள்கையில் மாற்றம் வருமா ?

**தொடர்ச்சி▲**

உதவிக்கரம் நீட்டுவதோடு எதிர்காலத்தைச் சிறப்பானதாக மாற்றி அமைப்பதில் அரசு கவனம் செலுத்தும் என்று தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா பொதுத் தேர்தல் கருத்துக் கணிப்பில் தற்போதைய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், முன்னிலை பெற்றிருப்பதாக கருத்துக் கணிப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா பிரதமர் அல்பானீஸின் தொழிலாளர் கட்சி, எதிர்க்கட்சிகளை விட முன்னிலை பெற்றிருப்பதாக இவ்வாற இறுதி கருத்துக்கணிப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டின் குடிவரவுக் கொள்கை என்பது அனைத்து கட்சிகளாலும், தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய விடயமாக பேசப்பட்டு வருகிறது. இது குறித்து பல கொள்கை முடிவுகளும் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில் குடிவரவு குறித்து முக்கிய கட்சிகள் முன்வைக்கும் கொள்கைகள் பொது மக்களிடையே பிரதிபலிக்கும்.

தேர்தல் காலங்களில் அகதி விவகாரம் அரசியல் ஆயுதமாகவும், பாகுபாடு கிளப்பும் கருவியாகவும் பயன்படுத்தப்படுவதாக சில சமூக அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன. அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் முக்கிய கட்சிகள் முன்வைக்கும் கொள்கைகள் குறித்த ஒரு பார்வையை சமூக நிகழ்வுகளையும் அரசியல் களத்தையும் வாக்காளர்கள் கூர்ந்து அவதானித்து வருகின்றனர்.

**தொழிற் கட்சி**
**சமூக சீர்திருத்த**
**வேலைத்திட்டம்**

1972 இல் பொருளாதார ஏற்றத்தின் கடைசிப் பகுதியில், விட்லாம் மற்றும் தொழிற் கட்சி சமூக சீர்திருத்த வேலைத் திட்டம் ஒன்றை முன்வைத்தது. அந்த நடவடிக்கைகளில் எவையும் இலாப முறையின் அத்திவாரங்களை சிறிதும் சவாலிடவில்லை. அந்த நோக்கமும் அவற்றுக்குக் கிடையாது, ஆனால் அவை குறிப்பிட்ட, மட்டுப்படுத்தப்பட்டவை என்றாலும், தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த பிரிவுகள் முன்னேற வேண்டும் என்பதைப் பிரதிபலித்தன.

1975-75 உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, போருக்குப் பிந்தைய பொருளாதார ஏற்றம் திடீரென முடிவுக்கு வந்தது. 1972 இல் தாராளவாத அரசு அகற்றப்பட்டதை தொடர்ந்து முன்னோடியில்லாத வகையில் தொழிலாளர் வர்க்க எழுச்சி ஏற்பட்டதை நிறுத்தத் தவறியது. விட்டலம் அரசே 1975 இல் சி.ஐ.ஏ. ஆதரவுடனான சதியால், கவர்னர் - ஜெனரால் செய்யப்பட்ட நிகழ்வில் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டது.




இதன் பின் பொருளாதார, அரசியல் நிலைப்பாடுகள் தொடர்ந்து ஆழ்ந்த மாறுதல்களுக்கு உட்பட்டன.

**பொருளாதார**
**மறு கட்டமைப்பு திட்டம்**

சீர்திருத்த வேலைத் திட்டத்தை தொடர்வதற்கு முற்றிலும் மாறான முறையில், 1983 இல் பதவிக்கு வந்த ஹாக்-கீட்டிங் தொழிற்கட்சி அரசு "பொருளாதார மறுகட்டமைப்புத்" திட்டத்தை தொடங்கி, அமெரிக்காவில் ஜனாதிபதி ரேகன், பிரித்தானிய பிரதம மந்திரி தாட்சர் ஆகியோரின் கீழ் தொடக்கப்பட்ட கொள்கைகளை சர்வதேச அளவில் இயைந்து செயற்படுத்தும் விதத்தில் தொழிலாள வர்க்கத்தின் சமூக நிலைகள் மீது தாக்குதலை நடத்தியது.

அப்பொழுது முதல் எந்தக் கட்சியும் சமூக சீர்திருத்த வேலைத் திட்டத்தை முன்வைத்துப் பேசுவதில்லை. உண்மையில், கடந்த மூன்று தசாப்தங்களாக "சீர்திருத்தம்" என்னும் கருத்துப்படிவமே ஒருவித ஓர்வெல்லிய முறை மாற்றத்தை அடைந்துள்ளது.

முன்பு "சீர்திருத்தம்" என்றால் பொது மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் கொள்கைகளைக் குறிப்பிட்டது. அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பு, இலவச பல்கலைக்கழகப் படிப்பு என்பவை உதாரணத்துக்கு விட்லம் தொடக்கிய இரு முக்கிய கொள்கைகள் ஆகும்.

தொடர்ந்த தடையற்ற சந்தை சீர்திருத்தங்கள் கடந்த இரண்டரை தசாப்தங்களாக பலவித சமூகப், பொருளாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

தொழிற்கட்சி மற்றும் தாராளவாத - தேசியக் கூட்டணியின் விடையிறுப்பு இரு கூறுபாடுகளை உடையது.

எல்லைப் பாதுகாப்பு என்ற பெயரில், சமூகச் சீற்றத்தை குடியேறுபவர்கள், அகதிகளுக்கு எதிராகத் திருப்புதல், அதே நேரத்தில் பிரச்சார அரசியல் விவாதத்தைப் பொருளற்ற சிந்தனை உரைகளாகக் குறைத்துவிடுதல் என்று ஏற்பட்டுவிட்டது.

# மக்கள் நன்மைக்காக எந்த நிலைக்கும் செல்லத் தயங்க மாட்டோம்: விஜய்



த.வெ.க. ஆட்சி சிறுவாணி நீரைப் போல தூய்மையானதாக இருக்கும் என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. பூத் கொமிட்டி முகவர்களுக்கான 2 ஆம் நாள் பயிற்சிப் பட்டறை கோவை எஸ்.என்.எஸ். கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் கட்சித் தலைவர் விஜய் உரையாற்றுகையில்,

“த.வெ.க. அரசியல் ஆதாயத்துக்காக தொடங்கப்பட்ட கட்சி கிடையாது. சமரசம் என்ற பேச்சுக்கே எங்களிடம் இடமில்லை. மக்கள் நன்மைக்காக எந்த நிலைக்கும் செல்லத் தயங்க மாட்டோம்.

ஊழல் இருக்காது. த.வெ.க. ஆட்சியில் ஊழல் இருக்காது, குற்றவாளிகள் இருக்க மாட்டார்கள். அதனால், எவ்வித தயக்கமுமின்றி மக்களை சந்தியுங்கள். த.வெ.க. ஆட்சி கோவையின் சிறுவாணி நீரைப்போல தூய்மையானதாக அமையும். தெளிவான, உண்மையான, வெளிப்படையான ஆட்சியாக இருக்கும்.

இவற்றை மக்களிடம் கொண்டு செல்லுங்கள். பண்டிகைகளைப்போல கொண்டாட்டமாக இந்தப் பணியை மேற்கொள்ளுங்கள். வெற்றியை அடைவதில் பூத் கொமிட்டி முகவர்களின் செயல்பாடு முக்கியம். நம்பிக்கையுடன் இருங்கள், நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.” - என்றார்.

முன்னதாக, நேற்று மாலை நிகழ்ச்சி நடைபெற்ற கல்லூரிக்கு, தான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து பிரச்சார வான் மூலம் ரோடு ஷோ நடத்தினார் விஜய். வீதியின் இருபுறத்திலும் கூடியிருந்த ஏராளமானோர் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

அதிக வாகனங்கள் மற்றும் கூட்ட நெரிசல் காரணமாக கல்லூரி வளாகத்தை சென்றடைய 2 மணி நேரத்துக்கு மேலானது. முதல் நாள் நிகழ்வில் பிரச்சார வாகனத்தின் கதவு தொண்டர்கள் கூட்டத்தால் சேதமடைந்ததால் காரில் சென்றார். இரண்டாம் நாள் நிகழ்வில் வாகனத்தின் கதவு சரிசெய்யப்பட்டதால், அதில் பயணித்தார்.

# பஹல்காமில் தீவிரவாதிகளுக்கு உதவிய 15 உள்ளூர் ஆதரவாளர்கள் கண்டுபிடிப்பு



காஷ்மீரின் பஹல்காமில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கு உள்ளூரில் உள்ள காஷ்மீர் ஆதரவாளர்கள் (காஷ்மீரி ஓவர்கிரவுண்ட் ஒர்க்கர்ஸ் - ஓஜிடபிள்யூ) உதவி செய்துள்ளதை புலனாய்வுத் துறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தீவிரவாதிகள் தங்குவதற்கு இடம், உணவு போன்ற வசதிகளை செய்து கொடுப்பவர்களை ஓவர்கிரவுண்ட் ஒர்க்கர்ஸ் என்று அழைக்கின்றனர். இதுகுறித்து புலனாய்வுத் துறை அதிகாரிகள் நேற்று குறிப்பிடுகையில்,

“பஹல்காமில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கு உள்ளூர் ஆதரவாளர்கள் 15 பேர் உதவினர் என்பது இலத்திரனியல் கருவிகளை ஆய்வு செய்த போது தெரிய வந்தது.

அவர்களில் முக்கிய குற்றவாளிகளாக 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் பிடிபட்டுள்ளனர். ஏனைய 2 பேரை தீவிரமாக தேடி வருகிறோம். தாக்குதல் நடந்த 22 ஆம் திகதி வரை அவர்களுடைய தொலைபேசிகள் உட்பட இலத்திரனியல் கருவிகள் இயங்கியுள்ளன. அதன்பிறகு அவை அணைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஏனைய 10 பேரிடம் என்.ஐ.ஏ, காஷ்மீர் பொலிஸ், புலனாய்வு பிரிவு, ரோ போன்ற அமைப்பினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் இன்னும் பஹல்காம் பகுதியில் அடர்ந்த வனப்பகுதியில் பதுங்கியிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். எனவே, வனப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.” என்று தெரிவித்தனர்.

இதற்கிடையில், தாக்குதல் நடந்த கடந்த 6 நாள்களில் 10 தீவிரவாதிகளின் வீடுகளை இந்திய பாதுகாப்புப் படையினர் இடித்து தரைமட்டமாக்கி உள்ளனர்.

# முதல்வரின் தாயார் மருத்துவமனையில்



முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாளுக்கு உடல் நலக்குறைவு காரணமாக சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தாயார் தயாளு அம்மாள் (வயது 92).

வயது முதிர்வு காரணமாக சென்னை கோபாலபுரத்தில் உள்ள வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறார். அவ்வப்போது ஏற்படும் உடல்நலக் குறைவுக்கு சிகிச்சை பெறுகிறார்.

இந்நிலையில், நேற்று அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மருத்துவர்கள் குழுவினர் அவரது உடல்நிலையை கண்காணித்து வருகின்றனர்.





# ஈரான் துறைமுகத்தில் வெடிப்புச் சம்பவம்; பலியானோர் எண்ணிக்கை 28 ஆக உயர்வு

தெற்கு ஈரானின் பண்டார் அப்பாஸ் துறைமுக பகுதியில் ஏற்பட்ட வெடிப்பு மற்றும் தீப்பரவல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

இந்த தீப்பரவலில் 800 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் காணாமல் போயுள்ள 6 பேரை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்தநாட்டு உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த துறைமுகம் முக்கியமாகக் கொள்கலன் போக்குவரத்தை மேற்கொள்வதுடன், எண்ணெய் தாங்கிகள் உள்ளிட்ட ஏனைய இரசாயன வசதிகளை வழங்கும் துறைமுகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எரியக்கூடிய பொருள்களை சேமித்து வைப்பதில் ஏற்பட்ட அலட்சியமே தீப்பரவலுக்கு காரணம் என சந்தேகிக்கப்படுவதுடன், வெடிப்புக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் புடினுக்கு விருப்பமில்லை; டொனால்ட் ட்ரம்ப் சந்தேகம்

உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு விருப்பமில்லை என்று எண்ணம் எழுவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் பங்கேற்க வத்திக்கான் சென்ற ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியை சந்தித்து உரையாடினார்.

வத்திக்கானில் ஸெலென்ஸ்கியை சந்தித்துவிட்டு அமெரிக்கா திரும்பிய



ட்ரம்ப்பின் போக்கில் திடீர் மாற்றம் ஏற்பட்டு, அமைதிக்கான புடினின் விருப்பம் குறித்து சந்தேகம் எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில்,

"கடந்த சில நாள்களாக, பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீது புடின் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்துவது சரியல்ல.

ஒருவேளை, புடின் போரை நிறுத்த விரும்பாமல், என்னை தவறாகத் திசைதிருப்பிக் கொண்டிருக்கிறாரோ எனும் எண்ணம் எழுகிறது. வர்த்தகத் தடை போன்று இதை வேறுவகைகளில் கையாள வேண்டும். ஏனெனில், ஏராளமான மக்கள் இறந்து கொண்டிருக்கின்றனர்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



# ரஷ்யாவுக்காகப் போரிடுவதற்கு வீரர்களை அனுப்பியதை ஒப்புக் கொண்ட வடகொரியா

உக்ரேனுக்கு எதிராக ரஷ்யாவுக்காகப் போரிட படைகளை அனுப்பியதை வட கொரியா முதல் முறையாக உறுதிப்படுத்தியுள்ளது.

வடகொரியாவின் அரசு செய்தி நிறுவனமான KCNA-வில் வெளியான ஒரு அறிக்கையில், ஜனாதிபதி கிம் ஜாங் உன் பிறப்பித்த உத்தரவின்படி, குர்ஸ்க் எல்லைப் பகுதியை ரஷ்யப் படைகள் முழுமையாக விடுவிக்க தங்கள் வீரர்கள் உதவினார்கள் என பியோங்யாங்கின் இராணுவம் கூறியது.

வட கொரிய வீரர்களின் வீரத்தை ரஷ்ய தலைமைத் தளபதி வலேரி ஜெராசிமோவ் பாராட்டிய சில நாள்களுக்குப் பின்னர் பியோங்யாங்கின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

மொஸ்கோ முதல் முறையாக போரில் வடகொரியாவின் ஈடுபாட்டைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டது.

வட கொரியாவிலிருந்து அனுப்பப்பட்ட 11,000 வீரர்களில் குறைந்தது ஆயிரம் பேர் மூன்று மாதங்களில் உயிரிழந்துள்ளனர் என நம்புவதாக மேற்கத்திய அதிகாரிகள் முன்னதாக கூறியிருந்தனர்.

தென் கொரிய மற்றும் மேற்கத்திய உளவுத்துறை, கடந்த ஆண்டு வட கொரியா குர்ஸ்க்கு ஆயிரக்கணக்கான வீரர்களை அனுப்பியதாக நீண்டகாலமாக செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் வடகொரியாவின் புதிய அறிவிப்பின்படி, பியோங்யாங் மற்றும் மொஸ்கோ இடையேயான பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி வீரர்களை அனுப்ப முடிவு செய்யப்பட்டது என்று KCNA தெரிவித்துள்ளது.

பக்கம் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 28/04/2025

## கனடா வான்கூவரில் சம்பவம் ; அதிகரிக்கும் பலி எண்ணிக்கை

கனடாவின் வான்கூவரில் ஒரு விருந்தில் மக்கள் கூட்டத்தின் மீது கார் மோதிய விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

கனடாவில் 02



# கனடாவில் பொதுத்தேர்தல்: வெற்றி வாய்ப்பு யாருக்கு?

**கனடாவில் பொதுத்தேர்தல் இன்று நடைபெறும் நிலையில், தேர்தல் முடிவுகள் லிபரல் கட்சிக்கு ஆதரவாக இருக்கும் என தேர்தலுக்கு முந்தைய கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.**


**சில மாதங்களுக்கு முன்வரை, லிபரல் கட்சியின் தலைவரும், கனடா பிரதமருமாக இருந்த ஜஸ்டின் ட்ரூடோவுக்கு மக்களிடையே ஆதரவு கணிசமாக குறைந்திருந்தது.**

மார்க் கார்னி பிரதமரானதைத் தொடர்ந்து லிபரல் கட்சி மீண்டெழுந்துள்ளது போல் தெரிகிறது.

தேர்தலுக்கு முந்தைய கருத்துகணிப்புகள், தேர்தல் முடிவுகள் லிபரல் கட்சிக்கு ஆதரவாக இருக்கும் என தெரிவித்துள்ளன.

ஆய்வமைப்பான Ipsos நிறுவனம் நேற்று மேற்கொண்ட கருத்துக் கணிப்புகளில், மார்க் கார்னியின் லிபரல் கட்சி, தேசிய அளவில் மக்களிடையே 42 சதவிகித ஆதரவு பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 38 சதவிகித ஆதரவும், ஜக்மீத் சிங்கின் நியூ டெமாக்ரட்ஸ் கட்சிக்கு 9 சதவிகித ஆதரவும் இருப்பதாக கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவித்துள்ளன.





# விமானத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த கனடா நாட்டவர் கைது

இந்தியாவின் உத்தர பிரதேசம் வாரணாசி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இண்டிகோ விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நிலையில், உடனடியாக விமானம் தரையிறக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டதில் எவ்வித வெடிகுண்டுகளும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் கனடாவைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக கோம்தி பகுதி பொலிஸ் உதவி ஆணையாளர் ஆகாஷ் படேல் கூறுகையில்,

“ஏப்ரல் 26 ஆம் திகதி வாரணாசியில் இருந்து புறப்பட்ட இண்டிகோ விமானத்தில் இருந்த ஒரு பயணி, விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக கூறினார். உடனடியாக, பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, விமானம் வாரணாசி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. விமானிகள், அவர்களின் உடைமைகள் முழுமையாக பரிசோதிக்கப்பட்டன.

அதன் பின்னரே அது புரளி என்பது தெரிய வந்தது. இந்த புரளியைக் கூறிய கனடாவைச் சேர்ந்த நிஷாந்த் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

விமான நிலைய நடவடிக்கைகளை தாமதப்படுத்த அவர் தவறான தகவலை அளித்துள்ளார் என்பது தெரிய வந்தது. அவர் மீது வழக்குப்பதியப்பட்டு, கனடா நாட்டு தூதரகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டு உள்ளது.” என்றார்.






# வான்கூவரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலால் சொல்லாணாத் துயரத்தில் ஆந்துள்ளேன்.

## மன்னர் சார்ள்ஸ் தெரிவிப்பு

கனடாவின் வான்கூவரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலால், சொல்லாணாத் துயரத்தில் ஆந்துள்ளதாக மன்னர் சார்லஸ் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வான்கூவரில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற Lapu Lapu Day Block Party என்னும் திருவிழாவின்போது, தெருவில் கூட்டமாக நின்ற மக்கள் மீது நபர் ஒருவர் காரைக் கொண்டு மோதினார்.

இந்த சம்பவத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். தாக்குதல் நிகழ்த்திய Kai-Ji Adam Lo (30) என்னும் நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், கனடாவுக்கும் மன்னரான சார்ள்ஸ், இந்த துயர சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“வான்கூவரில் நிகழ்ந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து அறிந்த நானும் எனது மனைவியும் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளோம்.

இத்தகைய ஒரு துயர சம்பவத்தால் உயிரிழந்த அனைவருக்கும் எங்கள் இதயப்பூர்வமான பிரார்த்தனைகள் உரித்தாகட்டும்.

இந்த சம்பவம் கனடாவில் பலருக்கும் மிகவும் வேதனையை உருவாக்கியுள்ள நேரத்தில், எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசிக்கும் பிலிப்பைன்ஸ் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு திருவிழாவிற்குள் ஒரு கார் நுழைந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கூட்டத்திற்குள் காரை ஓட்டிச் சென்ற 30 வயது நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார், மேலும் இந்த விபத்து பயங்கரவாதச் செயல் அல்ல என்றும் கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் மேலும் ஒரு குழுவினர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.இந்த விபத்து 26 ஆம் திகதி சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.



# கனடாவில் இடம்பெறவுள்ள சோழா கோப்பை போட்டி

உலகத் தமிழ் கோல்ஃப் வீரர்கள் சமூகத்தை ஒருங்கிணைக்கும் இரண்டாவது சோழா கோப்பை (Chola Cup) போட்டி, ஜூன் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கனடாவின் மஸ்கோகா விரிகுடாவில் நடைபெறவுள்ளது.

இந்த 2ஆவது சோழா கோப்பை போட்டியை 2025 தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம் (TGA - Tamil Golfers Association) அறிவிக்கின்றது.

2023ஆம் ஆண்டு, போர்த்துகல் நாட்டில் உள்ள ஃபாரோவில் பிரித்தானியா மற்றும் கனேடிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது சோழா கோப்பை போட்டியில் பிரித்தானியா அணி வெற்றி பெற்றது.

அந்த அங்குரார்ப்பண போட்டியின் பாரிய வெற்றியைத் தொடர்ந்து, பலத்த எதிர்பார்ப்புகளுடன் 2025இல் கனடாவில் நடைபெறவிருக்கும் இரண்டாவது போட்டி நடைபெறவிருக்கின்றது.

தமிழ்ச் சமூகத்தின் திறமை, ஒற்றுமை, மற்றும் கலாசார பெருமைகளை மையப்படுத்தி நடாத்தப்படும் இந்நிகழ்வானது, ஒரு போட்டி என்பதற்கு அப்பால், எமது சமூகத்தின் விடாமுயற்சி, தலைமைத்துவம் மற்றும் சமூக மட்டத்திலான முன்னெடுப்புகளின் தாக்கங்களை உலக அரங்கிலே கொண்டாடுவதற்கான ஒரு தருணமாகவும் அமைகின்றது.

பங்கேற்கும் அணிகள் பிரித்தானிய அணியை, ரதீசன் யோகநாதன் (தலைவர்) மற்றும் சுதன் தியாகராஜா (துணை தலைவர்) வழி நடாத்த, அச்சுதன் கணேசலிங்கம், ஜெயக்கொடி கேசவன், சுரேன் மயில்வாகனம், சிவகணன் கனகதுரை, ரவி ஹரிஹரன், ஸ்கந்தமூர்த்தி ரவிசங்கர், சாந்தகுமார் விக்னேஸ்வரலிங்கம், லியோன் ராசையா ரஞ்சித், முருகேசு லங்காலிங்கம், கஜேந்திரகுமாரன் பத்மநாதன், குகராஜா சண்முகம், பேர்னாரட் சின்னையா, திருநாவுக்கரசு யாதவன் மற்றும் கஜன் சரவணபவன் ஆகியோர் களமிறங்கவுள்ளனர்.

கனேடிய அணியை, சிவா சிவராஜ் (தலைவர்) மற்றும் நிறஞ்சன் நடராஜா (துணைத் தலைவர்) வழி நடாத்த, மைக்கேல் அமிர்தநாதன், விக்ரம் சிவராஜ், செந்திலர் செபாஸ்டியன், கெவின் லாரன்ஸ்பிள்ளை, வாணி நவரத்தினம், குமரன் சிவா, குமணன் கோபாலசாமி, அருள் ராஜ்குமார், அரவிந்த் கந்தப்பா, மார்க் அமிர்தநாதன், ஜுகான்சன் தயாளன், ஆண்ட்ரூ யேசுதாசன், வளவன் மனோகரராஜா, பாலமுகுந்தன் சாம்பசிவம், ஸ்டான் முத்துலிங்கம் (புரவலர்) ஆகியோர் கொண்ட அணி களமிறங்கவுள்ளது.

தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம் பற்றி 2021இல் தொலைநோக்குப் பார்வை கொண்ட தொழில்முனைவரும், நற்பணியாளருமான ரதீசன் யோகநாதன், Lebara Communications நிறுவனத்தின் முன்னாள் நிறுவனரால் நிறுவப்பட்ட தமிழ் கோல்ஃப் வீரர்கள் சங்கம், உலகெங்கிலும் உள்ள தமிழ் கோல்ஃப் வீரர்களை இணைப்பதற்கும், தமிழ் சமூகத்திற்குள் கோல்ஃப் விளையாட்டை வளர்ப்பதற்கும், சமூக கட்டுமானத்திற்கான ஒரு கருவியாக கோல்ப் விளையாட்டைப் பயன்படுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

